**தேதி:- 21.02.2020 அசல் வழக்கு எண்.148/2010 வா.சா.2 (சந்திரன்)**

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி:-**

1 ஆம் வாதிக்கு Rhematoid அதாவது எலும்புமூட்டு பிரச்சனை இருந்து வருகிறது. அதற்கான மருத்துவ ஆதாரம் தாக்கல் செய்ய முடியும். தாவாச் சொத்தில் எனக்கு பங்கு இல்லை. வழக்குச் சொத்துக்களில் எந்த சொத்தில் இருந்து வந்த எந்த வருமானத்தை நாங்கள் பிரித்துக் கொண்டோம் என்பதை நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளதை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி மீண்டும் ஞாபகமில்லை என்று மாற்றிக் கூறுகிறார். வழக்குரை சொத்துக்களில் எத்தனை சொத்துக்களை விற்றுள்ளார்கள் என்று எனக்குத் தெரியாது வாதிகளும் விற்றுள்ளார்கள். பிரதிவாதிகளும் விற்றுள்ளார்கள். தாவா தாக்கல் செய்த பிறகு தாவா 2 ஆம் லக்கச் சொத்தை விற்றுவிட்டோம். பிரதிவாதிகள் 1,2 லக்கச் சொத்துக்களை விற்றுவிட்டார்கள். 2 ஆம் லக்கச் சொத்தை எப்போது விற்றோம் என்றால் ஞாபகமில்லை. 2 ஆம்லக்கச் சொத்து முழுவதையும் 1,2 வாதிகள் விற்கவில்லை என்றால் அவர்களது பங்கை மட்டும் விற்றுள்ளார்கள். 1,2 பிரதிவாதிகள் தாவா 1,2 லக்கச் சொத்துக்களை எந்த தேதியில் யாருக்கு விற்றார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் விற்றார்கள். அதற்கான ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அது எந்த தேதிய ஆவணம் என்றால் ஞாபகமில்லை. தாவா 1 முதல்3 லக்கச் சொத்துக்கள் குறித்து 1,2 வாதிகள் 3 முதல் 5 வாதிகளுக்கு 05.10.2010 ல் ஒரு தான செட்டில்மெண்டு எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகத்தான் மேற்படி பத்திரத்தை எழுதிக் கொடுத்தார்கள். தானசெட்டில்மெண்டு எழுதிக் கொடுத்த பிறகு அந்த சொத்தின் உரிமையாளர்கள் 3 முதல் 5 வாதிகள். தானசெட்டில்மெண்டு எழுதிக் கொடுத்த பிறகு 1,2 பிரதிவாதிகளுக்கு அந்த சொத்தில் உரிமை உள்ளதா என்றால் எனக்கு சொல்லத் தெரியவில்லை. வழக்குரையில் மேற்படி தானசெட்டில்மெண்டு பத்திரம் பற்றி சொல்லப்பட்டுள்ளது. தானசெட்டில்மெண்டு எழுதிக் கொடுத்த பிறகு 1,2 வாதிகளுக்கு செட்டில்மெண்டு சொத்தில் எவ்வளவு பங்கு உள்ளது என்றால் எனக்குத் தெரியவில்லை. வா.சா.ஆ.9 ல் சொத்தின் சுவாதீனத்தையும் 3 முதல் 5 வாதிகளுக்கு ஒப்படைத்ததாக வாசகம் கண்டுள்ளது. சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக வா.சா.ஆ.9 ல் கண்டிருப்பது பொய். வா.சா.ஆ.17

லும் சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது அவ்வாறு சொல்லியிருப்பது பொய். வா.சா.ஆ 9 மற்றும் 17 ல் 1,2 வாதிகளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்தை செட்டில்மெண்டு எழுதி வைப்பதாக கண்டுள்ளது. 1,2 வாதிகள் சொத்துக்களை பிரதிவாதிகளுடன் கூட்டாக அனுபவித்து வந்ததாக காட்ட ஆதாரம் இல்லை. 2006 க்கு முன்பாக தாவாச் சொத்துக்களுக்கான பட்டா ஆறுமுகம்பிள்ளையின் பெயரில் இருந்தது. அந்தப்பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. வா.சா.1 தாக்கல் செய்துள்ள ஆவணங்களைப் பார்த்துள்ளேன். அதில் பட்டா உள்ளதா என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளார். தாவா 1 ஆம் லக்கச் சொத்திற்கான பட்டா எண்.24, 2, 3 ஆம் லக்கச் சொத்துக்களுக்கான பட்டா எண்.93, 4 ஆம் லக்கச் சொத்திற்கான பட்டா எண்.297. நான் பொய் சொல்கிறேன் என்றும் அவ்வாறு பட்டா எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் வா.சா.1 தாக்கல் செய்த ஆவணங்களை பார்ர்க்காமலேயே சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.9 மற்றும் 17 க்குப் பிறகு 3 முதல் 5 வாதிகள் பெயரில் பட்டா மாற்றப்படவில்லை. 3 முதல் 5 வாதிகள் வரியும் செலுத்தவில்லை. வா.சா.ஆ 9 மற்றும் 17 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதால்தான் 3 முதல் 5 வாதிகள் பெயரில் பட்டாவும் மாற்றப்படவில்லை என்றும் அவர்கள் வரியும் செலுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஆறுமுகம்பிள்ளைக்கு புலஎண்.148/8 ல் பாத்தியப்பட்ட சொத்தின் விஸ்தீரணம் 35 செண்டு. அந்த 35 செண்டு நிலம் தற்போது வீட்டுமனைகளாக உள்ளது.அந்த வீட்டுமனைகளை பலபேர் வாங்கியிருக்கிறார்கள். அந்த 35 செண்டு நிலம் கொக்குளப்பி கிராமத்தில் உள்ளது. மேற்படி 35 செண்டு நிலத்தை மகேஸ்வரி, தங்கமணி, ஏரல், ஜெயராஜ் மற்றும் குமார் ஆகியோர் கிரையம் பெற்றுவிட்டதாக வா.சா.ஆ 4,மற்றும் 23 முதல் 26 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அவர்கள் பெயர் எனக்குத் தெரியாது. மேறப்டி கிரையப்பத்திரங்களை நான் படித்துப் பார்த்துள்ளேன். அந்தக்கிரையங்கள் 2002 லேயே ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். 35 செண்டில் எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றால் என்னால் சொல்ல முடியாது 2002 ல் மேறப்டி கிரையங்களை ஆறுமுகம்பிள்ளையே செய்துவிட்டார் என்றால் சரிதான். 35 செண்டில் கிரையம் செய்தது போக மீதம் சொத்து இருப்பதாக காட்ட ஆதாரம்

தாக்கல் செய்ய முடியும். மீதம் எத்தனை செண்ட் உள்ளது என்றால் மனை எண்.57 ஏ மட்டும் உள்ளது. அதன் விஸ்தீரணம் தெரியாது. கிழமேல் ஒருபக்கம் 24 அடி, மற்றொரு பக்கம் 20 அடி. தென்புரம் இருபுறமும் 60 அடி. அதுபோக 806 சதுரடியும் உள்ளது. ஆனால் வழக்குரை சொத்துவிபரத்தில் 35 செண்டையும் 4 வது லக்கச் சொத்தாக காட்டியுள்ளோம் என்றால் சரிதான். 35 செண்டில் யார்யாருக்கு சொத்தை விற்றுள்ளார்கள் என்பதை வழக்குரையில் சொல்லியுள்ளோமா என்றால் எனக்குத் தெரியாது. பி.சா.ஆ.1 ல் 1 ஆம் வாதி கையொப்பம் இட்டுள்ளார். பிசா..ஆ.1 ல் பி அட்டவணையில் கொக்குளப்பி கிராமத்தில் புலஎண்.15/7 ல் உள்ள 9 செண்டினை மூன்று பெண்பிள்ளைகளுக்கும் தலா 3 செண்டாக ஒதுக்கப்பட்டு 1 ஆம் வாதிக்கு ஒதுக்கப்பட்ட 3 செண்டை 1 ஆம் வாதி விற்றுவிட்டார் என்றால் சரியல்ல. மற்ற இரண்டு சகோதரிகளும் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட தலா 3 செண்டை விற்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.